# TNPSC TET SI EXAM

## 27. 9ஆம் வகுப்பு Q அறிவியல் தேர்வு

9th Standard

1) ஏறும் கொடிகள் தங்களுக்கு பொருத்தமான ஆதரவைக் கண்டறிய உதவும் இயக்க அசைவுகள்________.

(a) ஒளி சார்பசைவு (b) புவி சார்பசைவு (c) தொடு சார்பசைவு (d) வேதிசார்பசைவு

2) ஒளிச்சேர்கையின் போது நடைபெறுவது

(a) $CO_2$ இழுக்கப்பட்டு $O_2$ வெளியேற்றப்படுகிறது.

(b) நீர் ஒடுக்கமடைதல் மற்றும் $CO_2$ ஆக்ஸிகரணம் அடைதல்

(c) நீர் மற்றும் $CO_2$ இரண்டுமே ஆக்ஸிகரணம் அடைதல்

(d) $CO_2$ மற்றும் நீர் இரண்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன.

3) நீர் தூண்டலுக்கு ஏற்ப தாவர வேர் வளைவது ___________ எனப்படும்

(a) நடுக்கமுறு வளைதல் (b) ஒளிச்சார்பசைவு (c) நீர்சார்பசைவு (d) ஒளியுறு வளைதல்

4) இளம் நாற்றுகளை இருட்டறையில் வைக்க வேண்டும். பிறகு அதன் அருகில் எரியும் மெழுகுவர்த்தியினை சில நாட்களுக்கு வைக்க வேண்டும். இளம் நாற்றுகளின் மேல் முனைப்பகுதி எரியும் மெழுகுவர்த்தியை நோக்கி வளையும். இவ்வகை வளைதல் எதற்கு எடுத்துக்காட்டு?

(a) வேதிச் சார்பசைவு (b) நடுக்கமுறு வளைதல் (c) ஒளிச் சார்பசைவு

(d) புவிஈர்ப்பு சார்பசைவு

5) தாவரத்தின் வேர் ___________ ஆகும்

I. நேர் ஒளிசார்பசைவு ஆனால் எதிர் புவி ஈர்ப்பு சார்பசைவு
II. நேர் புவிஈர்ப்பு சார்பசைவு ஆனால் எதிர் ஒளி சார்பசைவு
III. எதிர் ஒளி சார்பசைவு ஆனால் நேர் நீர்சார்பசைவு
IV. எதிர் நீர் சார்பசைவு ஆனால் நேர் ஒளி சார்பசைவு

(a) I மற்றும் II (b) II மற்றும் III (c) III மற்றும் IV (d) I மற்றும் IV

6) வெப்பத் தூண்டுதலுக்கு ஏற்ப தாவர உறுப்பு திசை சாரா தூண்டல் அசைவுகளை உருவாக்குவது_________ எனப்படும்

(a) வெப்ப சார்பசைவு (b) வெப்பமுறு வளைதல் (c) வேதி சார்பசைவு

(d) நடுக்க முறு வளைதல்

7) இலையில் காணப்படும் பச்சையம் ___________ க்கு தேவைப்படும்

(a) ஒளிச்சேர்க்கை (b) நீராவிப்போக்கு (c) சார்பசைவு (d) திசைசாரா தூண்டல் அசைவு

8) நீராவிப்போக்கு ________ ல் நடைபெறும்

(a) பழம் (b) விதை (c) மலர் (d) இலைத்துளை

9) பின்வரும் தொகுதிகளில் கடல் வாழ் உயிரினங்களை மட்டும் கண்டறிக

(a) மெல்லுடலிகள் (b) துளையுடலிகள் (c) குழியுடலிகள் (d) முட்தோலிகள்

10) மீசோகிளியா காணப்படுவது

(a) துளையுடலிகள் (b) குழியுடலிகள் (c) வளைதசையுடலிகள் (d) கணுக்காலிகள்

11) பின்வரும் ஜோடிகளில் எது குளிர் இரத்தப் பிராணி அல்ல?

(a) மீன்கள் மற்றும் இரு வாழ்விகள் (b) இருவாழ்விகள் மற்றும் பறவைகள்

(c) பறவைகள் மற்றும் பாலூட்டிகள் (d) ஊர்வன மற்றும் பாலுட்டிகள்

12) நான்கு அறைகளையுடைய இதயம் கொண்ட விலங்கினைக் கண்டறிக.

(a) பல்லி (b) பாம்பு (c) முதலை (d) ஓணான்

13) மண்டையோடற்ற உயிரிகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன ?

(a) ஏக்ரேனியா (b) ஏசெபாலியா (c) ஏப்டீரியா (d) ஏசீலோமேட்டா

14) இரு பாலின (Hermaphrodite) உயிரிகள் எவை ?

(a) ஹைடிரா, நாடாப்புழு, மண்புழு, ஆம்பியாக்சஸ்

(b) ஹைடிரா, நாடாப்புழு, மண்புழு, அசிடியன்

(c) ஹைடிரா, நாடாப்புழு, மண்புழு, பலனோகிளாசஸ்

(d) ஹைடிரா, நாடாப்புழு, அஸ்காரிஸ், மண்புழு

15) குளிர் இரத்தப் பிராணிகள் எவை ?

(a) மீன், தவளை, பல்லி, மனிதன் (b) மீன், தவளை, பல்லி, மாடு

(c) மீன், தவளை, பல்லி, பாம்பு (d) மீன், தவளை, பல்லி, காகம்

16) நாடாப்புழுவின் கழிவு நீக்க உறுப்பு?

(a) சுடர் செல்கள் (b) நெஃப்ரீடியா (c) உடற்பரப்பு (d) சொலினோசைட்டுகள்

17) குழல் போன்ற உணவுக்குழலைக் கொண்டது எது ?

(a) ஹைடிரா (b) மண்புழு (c) நட்சத்திர மீன் (d) அஸ்காரிஸ் (உருளைப்புழு)

18) காற்றுறைகள் மற்றும் காற்றெலும்புகள் காணப்படுவது எதில்?

(a) மீன் (b) தவளை (c) பறவை (d) வௌவால்

19) மனித உடலின் சில தேவைகளை பூர்த்தி செய்ய குறைந்த அளவே (மைக்ரோ) தேவைப்படும் ஊட்டச்சத்து

(a) கார்போஹைட்ரேட்டுகள் (b) புரோட்டீன் (c) வைட்டமின் (d) கொழுப்பு

20) சிட்ரஸ் வகை பழங்களை உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் 'ஸ்கர்வி' நோயைக் குணப்படுத்த முடியும் என்று கூறியவர்

(a) ஜேம்ஸ் லிண்ட் (b) லூயிஸ் பாஸ்டர் (c) சார்லஸ் டார்வின் (d) ஐசக் நியூட்டின்

21) வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு போன்றவை முளை கட்டுவதைத் தடுக்கும் முறை

(a) அதிக குளிர் நிலையில் பாதுகாத்தல் (b) கதிர் வீச்சுமுறை (c) உப்பினைச் சேர்த்தல்

(d) கலன்களில் அடைத்தல்

22) மத்திய அரசின் உணவு மற்றும் உணவுக் கலப்படச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

(a) 1964 (b) 1954 (c) 1950 (d) 1963

23) உணவு கெட்டுபோவதற்குக் காரணமாக உள்காரணியாகச் செயல்படுவது

(a) மெழுகுப் பூச்சு (b) சுகாதாரமற்ற சமையல் பாத்திரங்கள் (c) உணவின் ஈரத்தன்மை

(d) செயற்கை உணவுப் பாதுகாப்புப் பொருள்கள்

24) கலோரி என்பது எதனுடைய அலகு?

(a) வெப்பம் (b) வேலை (c) வெப்பநிலை (d) உணவு

25) வெப்பநிலையின் SI அலகு

(a) ஃபாரன்ஹீட் (b) ஜூல் (c) செல்சியஸ் (d) கெல்வின்

26) ஒரே நீளமுள்ள இரண்டு உருளை வடிவியுள்ள கம்பிகளின் குறுக்கு வெட்டுப் பரப்பின் விகிதம் 2:1 இரண்டு கம்பிகளும் ஒரே மாதிரியான பொருளில் செய்யப்பட்டிருந்தால் எந்தக் கம்பி வெப்பத்தை அதிகம் கடத்தும்?

(a) இரண்டும் (b) கம்பி-2 (c) கம்பி-1 (d) எதுவும் இல்லை

27) மூலக்கூறுகளின் இயக்கமின்றி வெப்பமானது ஒரு மூலக்கூறில் இருந்து அருகில் இருக்கும் மற்றொரு மூலக்கூறுக்கு வெப்பத்தைக் கடத்தும் முறையின் பெயர் என்ன?

(a) வெப்பக்கதிர்வீச்சு (b) வெப்பக்கடத்தல் (c) வெப்பச்சலனம் (d) b மற்றும் c

28) வெப்பக் கடத்தல், வெப்பக் சலனம், வெப்பக் கதிர்வீச்சு ஆகியவற்றின் மூலம் ஏற்படும் வெப்பஇழப்பைக் குறைக்கும் கருவி.

(a) சூரிய மின்கலம் (b) சூரிய அழுத்த சமையற்கலன் (c) வெப்பநிலைமானி

(d) வெற்றிடக் குடுவை

29) ஒரு பொருளில் நேர் மின்னூட்டம் தோன்றுவதன் காரணம்

(a) எலக்ட்ரான்களின் ஏற்பு (b) புரோட்டான்களின் ஏற்பு (c) எலக்ட்ரான்களின் இழப்பு

(d) புரோட்டான்களின் இழப்பு

30) சீப்பினால் தலைமுடியைக் கோதுவதனால்

(a) மின்னூட்டங்கள் உருவாக்கப்படுகின்றன (b) மின்னூட்டங்கள் இடம்பெயர்கின்றன

(c) அ அல்லது ஆ (d) இரண்டும் அல்ல

31) மின்விசைக் கோடுகள் நேர் மின்னூட்டத்தில் ___________, எதிர் மின்னூட்டத்தில் ___________ .

(a) தொடங்கி; தொடங்கும் (b) தொடங்கி; முடிவடையும் (c) முடிவடைந்து; தொடங்கும்

(d) முடிவடைந்து; முடியும்

32) ஒரு மின்னூட்டத்திற்கு அருகில் மின்னழுத்தம் என்பது ஓரலகு நேர் மின்னூட்டம் ஒன்றை அதனருகில் கொண்டு வர செய்யப்படும் __________ அளவாகும்.

(a) விசையின் (b) திறமையின் (c) போக்கின் (d) வேலையின்

33) மின்பகு திரவத்தில் மின்னோட்டத்தின் பாய்விற்குக் காரணம் ___________

(a) எலக்ட்ரான்கள் (b) நேர் அயனிகள் (c) அ மற்றும் ஆ (d) இரண்டும் அல்ல

34) மின்னோட்டத்தின் வெப்ப விளைவு __________ என அழைக்கப்படும்.

(a) ஜூல் வெப்பமேறல் (b) கூலூம் வெப்பமேறல் (c) மின்னழுத்த வெப்பமேறல்

(d) ஆம்பியர் வெப்பமேறல்

35) மின்முலாம் பூசுதல் எதற்கு எடுத்துக்காட்டு?

(a) வெப்ப விளைவு (b) வேதி விளைவு (c) பாய்வு விளைவு (d) காந்த விளைவு

36) ஒரு கம்பியின் மின்தடை இதைப் பொறுத்து அமையும்?

(a) வெப்பநிலை (b) வடிவம் (c) கம்பியின் இயல்பு (d) இவையனைத்தும்

37) நைட்ரஜன், பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் போன்ற கனிமங்கள் தாவரங்களுக்கு அதிக அளவு தேவைப்படும். இதனால் இக்கனிமங்கள் __________ எனப்படும்.

38) தூண்டலை நோக்கி: __________
தூணெலுக்கு அப்போல்: எதிர் சார்பகைவு

39) நீர் சார்பகைவு: நீர் தூணெலுக்கு ஏற்ப வலைதல்
ஒளி சார்பகைவு: __________

40) ஒளிச்சேர்க்கை: __________
நீரோவிப்போக்கு: இலைத்துளை.

41) உணர்திறன் கொண்ட தாவரத்தின் இலைகளை தொடும்போது, இலைகள் மூடிக்கொள்ளும் மற்றும் டான்டேலியன் மலர்களின் இதழ்கள் ஒளி மங்கும்போது மூடிக்கொள்ளும், இந்த இரண்டு தாவரங்களிலும் காணப்படுவது _________ மற்றும் ------------- அசைவுகள் எனப்படும்.

42) நிலவு மலர் (Moon Flower) மூடுவதும் மற்றும் திறப்பதும் சார்பசைவை சார்ந்ததல்ல, ஏனென்றால் இதில் காணப்படும் அசைவு _______ எனப்படும்.

43) ஒளிச்சேர்க்கைக்கு தேவைப்படும் மூலப்பொருட்கள் __________ மற்றும் _______

44) ஸ்டார்ச் ஆய்வின்போது அயோடின் கரைசல் சேர்க்கப்படும் இதனால் இலைகளில் __________கொண்ட பாகங்கள் மட்டும் கருநீல நிறமாக மாறும்.

45) ________ வடிவில் உணவு, இலைகளில் சேமிக்கப்படும்.

46) தாவரங்கள் உறிஞ்சும் நீரில் _______ சதவிகிதம் மட்டுமே ஒளிச்சேர்க்கை மற்றும் மற்ற செயல்பாடுகளுக்கு தேவைப்படும்.

47) தாவரங்கள் தொடர்ச்சியாக காற்றினை உள்ளிழுத்தல் மற்றும் வெளிவிடுதல் _______ வழியாக நடைபெறும்.

48) முளைக்கும் விதையிலிருந்து தோன்றும் தண்டுப்பகுதி __________உள்ள பகுதியை நோக்கி வளர்கிறது.

49) __________ என்பது வளர்ச்சி சார்ந்த இயக்கம் ஆகும்.

50) பசுந்தாவரங்கள் அனைத்தும் ___________ ஊட்டம் உடையவை.

51) தாவரம் மண்ணிலிருந்து நீர் மற்றும் தனிமங்களை ____________ மூலம் பெற்றுக் கொள்கின்றன.

52) ___________ தாவர இலைகள் பல வண்ண வேறுபாடுகளுடன் காணப்படும்.

53) பச்சையம் மூலக்கூறு அமைப்பின் மையத்தில் ___________ காணப்படும்.

54) ஒவ்வொரு இலைத்துளையும் இரண்டு __________ வடிவ செல்களால் சூழப்பட்டுள்ளது.

55) நீராவிப் போக்கினால் தாவரத்தின் தண்டு மற்றும் இலைகளில் ____________ ஏற்படுகிறது.
56) விலங்குலகின் மிகப் பெரிய இரண்டாவது தொகுதி ----------------------
57) இந்தியாவில் தேசிய குடல்புழு நீக்க நாளாகப் பின்பற்றும் தினம் -----------
58) மையோடோம்கள் ---------------------- இல் காணப்படுகிறது
59) பறவைகளில் காற்றுப் பைகள் ---------------------- உடன் தொடர்பு கொண்டுள்ளன
60) தாய்-சேய் இணைப்புத் திசு ---------------------வின் சிறப்புப் பண்பாகும்
61) நமது தேசியப் பறவையின் இரு சொற் பெயர் ---------------------
62) --------------------- வளர்ப்பது நீலப்புரட்சி எனப்படும்.
63) பாலூட்டிகளில் விந்தகத்தைச் சுற்றி --------------------- வரை உள்ளது
64) உயிருள்ளவைகளை முதன்முதலில் வகைப்படுத்தியவர் ______________ .
65) _____________ செல்களில் உட்கரு காணப்படுவதில்லை.
66) கரு உருவாக்கத்தின் பொழுது உருவாகும் படலங்கள் _____________ எனப்படும்.
67) உடலின் உள் திரவத்தினால் நிரப்பப்பட்ட குழி _____________ எனப்படும்.
68) பாலிப் மற்றும் மெடுசா எனும் இரு வடிவ அமைப்புகள் கொண்ட தொகுதி ____________ .
69) மனித சிறுகுடலில் நோய் தொற்றினை ஏற்படுத்தக்கூடிய புழு _____________ .
70) மண்புழு __________ மூலம் இடப்பெயர்ச்சி செய்கின்றன.
71) கணுக்காலிகளின் உடலில் மேற்புறத்தில் ____________ பாதுகாப்பு உறையாக உள்ளது.
72) நில வாழ் கணுக்காலிகள் __________ என்னும் நுண் மூச்சுக்குழல் மூலமாக சுவாசம் மேற்கொள்கின்றன.
73) முதுகு நாண் பெற்ற விலங்குகள் ____________ எனப்படும்.
74) ____________ முட்டைகளில் தடித்த தோல் போன்ற ஓடு உண்டு.
75) பறவைகளின் முட்டைகள் கடினமான _____________ மிகுந்த ஓடுடையவை.
76) ________ பொருட்கள் திட மற்றும் திரவப் பொருட்களை விட அதிகமாக விரிவடையும்.
77) பனிக் கட்டியை வெப்பப்படுத்தும் போது _________ ஆக மாறுகிறது
78) எஸ்கிமோக்கள் தங்கள் வீட்டுக்கள் குளிர் வராமல் தடுக்க கருவிகளின் மடிப்பிற்கு _________ தோல்களை பயன்படுத்துவார்கள்.
79) இரவு நேரங்களில் கடல் பரப்பின் மேல் உள்ள காற்று _______ காணப்படும்.
80) வெப்பக்கதிர் வீச்சு ______ கூட நடைபெறும்.
81) வெப்பக்கதிர் வீச்சை ஒளியின் திசைவேகத்தில் செல்லக்கூடிய ________ கருதலாம்.
82) பொருட்கள் வெப்பத்தை உட்கவரும் தன்மையை ________ என்று குறிப்பிடலாம்.
83) பித்தளையின் தன் வெப்ப ஏற்புத்திறனின் மதிப்பு _________ ஆகும்.
84) வெப்ப ஏற்புத்திறனின் SI அலகு _____ ஆகும்.
85) எந்த வெப்ப நிலையில் திரவப்பொருள் வாயு நிலைக்கு மாறுகிறதோ அந்த வெப்பநிலை அதன் _______ ஆகும்.

86) தனிச்சுழி வெப்பநிலை என்பது
87) முறி சாவி என்பது ஒரு _______ பாதுகாப்பு கருவியாகும்.
88) ஓர் அணுவுடன் ஒரு எலக்ட்ரான் சேர்க்கப்பட்டால் அவ்வணு ______ அயனி எனப்படும்.
89) ஒரு எலக்ட்ரானின் மின்னூட்டம் ___________ க்கு சமமாக இருக்கும்.
90) ________ இல் வரையப்படும் கோடுகள் கற்பனை கோடுகள் ஆகும்.
91) மின்னழுத்த வேறுபாட்டை அளவிட உதவும் கருவி __________ ஆகும்.
92) __________ மின்னழுத்த வேறுபாடு, மின்னோட்டம் மற்றும் மின்தடை ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்பை கண்டறிந்தார்.
93) நம் வீடுகளுக்கு வழங்கப்படும் மின்னோட்டம் ________ மின்னோட்டமாகும்.
94) மாறுதிசை மின்னோட்டத்தை நேர் மின்னோட்டமாக மாற்ற உதவும் கருவி _______ ஆகும்.
95) மாறுதிசை மின்னோட்டதின் மின்னழுத்த மதிப்பை _________ என்ற பொறியைக் கொண்டு எளிதில் மாற்ற முடியும்.
96) அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வீடுகளுக்கு பயன்படும் மாறு மின்னோட்டத்தின் மின்னழுத்தம் ______ .

97) __________ தொடர்பியலின் தத்துவத்தின் அடிப்படையில் செயல்படும் கருவி ஆகும்.

MATCH

| | |
|---|---|
| 98) வேர் நிலத்தில் கீழ்நோக்கி வளர்வது | (1) நேர் புவிசார்பசைவு |
| 99) தண்டு ஒளியை நோக்கி வளர்வது | (2) எதிர் புவிசார்பசைவு |
| 100) தண்டு மேல் நோக்கி வளர்வது | (3) பூரான் |
| 101) வேர் சூரியஒளிக்கு எதிராக கீழ் நோக்கி வளர்வது | (4) ஹைட்ரா |
| 102) குழியுடலிகள் | (5) நாடாப்புழு |
| 103) தட்டைப்புழுக்கள் | (6) நட்சத்திர மீன் |
| 104) முட்தோலிகள் | (7) கடற் பஞ்சு |
| 105) மெல்லுடலிகள் | (8) ஹைட்ரா |
| 106) துளையுடலிகள் | (9) எதிர் ஒளி சார்பசைவு |
| 107) குழியுடலிகள் | (10) நேர் ஒளிசார்பசைவு |
| 108) கணுக்காலிகள் | (11) நத்தை |

109) வலியுறுத்தல்: ஹீமோகுளோபினில் இரும்பு உள்ளது.
காரணம்: இரும்புக் குறைபாடு இரத்தசோகை நோயை ஏற்படுத்துகிறது.
அ) வலியுறுத்தல் மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரியாக இருந்து,அதில் அந்தக்காரணம் வலியுறுத்தலின் சரியான விளக்கம் ஆகும்.
ஆ) வலியுறுத்துதல் மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரியாக இருந்து, அதில் காரணம் அந்த வலியுறுத்தலின் சரியான விளக்கம் அல்ல.
இ) வலியுறுத்தல் சரியாக இருந்து காரணம் மட்டும் தவறு.
ஈ) வலியுறுத்தல் மற்றும் காரணம் இரண்டும் தவறு.

110) வலியுறுத்தல்: அக்மார்க் என்பது ஒரு தரக்கட்டுப்பாட்டு நிறுவனம்.
காரணம்: ஐஎஸ்ஐ என்பது தரத்தின் குறியீடு.
அ) வலியுறுத்தல் மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரியாக இருந்து,அதில் அந்தக்காரணம் வலியுறுத்தலின் சரியான விளக்கம் ஆகும்.
ஆ) வலியுறுத்துதல் மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரியாக இருந்து, அதில் காரணம் அந்த வலியுறுத்தலின் சரியான விளக்கம் அல்ல.
இ) வலியுறுத்தல் சரியாக இருந்து காரணம் மட்டும் தவறு.
ஈ) வலியுறுத்தல் மற்றும் காரணம் இரண்டும் தவறு.

111) **கருத்து:**தாமிரப் பகுதிளய அடிப்பகுதியோகக் கொண்ட பாத்திரங்கள் மூலம் விரைவாக சமைக்கலாம்.
**காரணம்:**தாமிரம் ஒரு எளிதிற் கடத்தி.
அ. கருத்தும் காரணமும் சரி. கருத்துக்கான காரணம் சரியானது.
ஆ. கருத்தும் காரணமும் சரி. ஆனால் கருத்துக்கான காரணம் தவறு.
இ. கருத்து சரி. காரணம் தவறு.
ஈ. கருத்து தவறு. காரணம் சரி.

112) **கருத்து:** மதிய வேளையில் அதிகமான சூரியக் கதிர்கள் பூமியை வந்தடைகின்றன.
**காரணம்:** சூரியக்கதிர்கள் வெப்பக் கதிவீச்சு மூலம் பூமியை வந்தடைகின்றன.
அ. கருத்தும் காரணமும் சரி. கருத்துக்கான காரணம் சரியானது.
ஆ. கருத்தும் காரணமும் சரி. ஆனால் கருத்துக்கான காரணம் தவறு.
இ. கருத்து சரி. காரணம் தவறு.
ஈ. கருத்து தவறு. காரணம் சரி.

113) **கருத்து:** வெப்பநிலை $100^oC$ எட்டியவுடன் வெப்பநிலை மேலும் மாறாமல் நீர் நீராவியாக மாறுகிறது.
**காரணம்:** நீரின் கொதிநிலை $10^oC$ .
அ. கருத்தும் காரணமும் சரி. கருத்துக்கான காரணம் சரியானது.
ஆ. கருத்தும் காரணமும் சரி. ஆனால் கருத்துக்கான காரணம் தவறு.
இ. கருத்து சரி. காரணம் தவறு.
ஈ. கருத்து தவறு. காரணம் சரி.

114) உறுதிபடுத்துதல் (A): புவி ஈர்ப்பு திசையை நோக்கி தாவரப் பாகம் அசைத்தல் நேர் புவிச்சார்பசைவு என்று பெயர்.
காரணம் (R): தண்டு நேர் புவி ஈர்ப்பு சார்பசைவை கொண்டவை.
அ) A மற்றும் R இரண்டுமே தவறு
ஆ) A தவறு R சரி
இ) A சரி, R தவறு
ஈ) A மற்றும் R இரண்டுமே சரி

115) உறுதிப்படுத்துதல் (A(: தாவரத்தில் உள்ள அதிகபடியான நீர் தாவரத்தின் தரைக்கு மேல் உள்ள தாவர பாகத்தின் வழியாக நீராவியாக வெளியேறுதல் நீராவிப்போக்கு எனப்படும்.
காரணம் (R): இலையில் காணப்படும் இலைத்துளைகள் நீராவிபோக்கை நிகழ்த்தும்.
அ) A மற்றும் R இரண்டும் தவறு
ஆ) A தவறு R சரி
இ) A சரி, R தவறு
ஈ) A மற்றும் R இரண்டுமே சரி.

116) கூற்று: ஹைட்ரா ஈறடுக்கு உயிரி
கரணம்: இது உடலில் இரண்டு அடுக்குகளைக் கொண்டது
( அ) கூற்று சரி, கரணம் தவறு.
( ஆ) கரணம் சரி கூற்று தவறு.
( இ) கூற்றும் காரணமும் சரியானது.
( ஈ) கூற்றும் காரணமும் தவறானது.

117) கூற்று: முன் முதுகு நாணிகள் எகிரேனியாவில் தொகுக்கப்பட்டுள்ளது.
கரணம்: அவற்றில் தெளிவான மண்டையோடு (கிரரேனியம்) உள்ளது.
(அ) கூற்று சரி, கரணம் தவறு.
(ஆ) கரணம்  சரி, கூற்று தவறு.
(இ) கூற்றும் காரணமும் சரியானது.
(ஈ) கூற்றும் காரணமும்  தவறானது.

118) கூற்று : நட்சத்திரமீன் ஆரச் சமச்சீருடைய உயிரினம்.
காரணம் : உயிரியின் எந்த ஒரு கோணத்தில் இருந்து பிரிந்தாலும் சமமான பாகமாக பிரிக்க முடியும்.
அ) கூற்று சரி, காரணம் தவறு
ஆ) காரணம் சரி, கூற்று தவறு
இ) கூற்றும் காரணமும் சரி
ஈ) கூற்றும் காரணமும் தவறு

119) கூற்று : மண்புழுக்கள் உடற்கண்டங்களுடன் காணப்படும்.
காரணம் : மண்புழுக்கள் சீட்டாக்கள் மூலம் இடப்பெயர்ச்சி செய்வதில்லை.
அ) கூற்று சரி, காரணம் தவறு
ஆ) காரணம் சரி, கூற்று தவறு
இ) கூற்றும் காரணமும் சரி
ஈ) கூற்றும் காரணமும் தவறு

120) கூற்று: மெல்லுடலிகள் மால்பிஜியன் குழல்கள் மூலம் கழிவு நீக்கம் செய்கிறது.
காரணம் : மெல்லுடலிகள் பச்சை சுரப்பிகளைக் கொண்டது.
அ) கூற்று சரி, காரணம் தவறு
ஆ) காரணம் சரி, கூற்று தவறு
இ) கூற்றும் காரணமும் சரி
ஈ) கூற்றும் காரணமும் தவறு

121) கூற்று : மீன்களில் சுவாசம் செவுள்கள் மூலம் நடைபெறுகிறது.
காரணம் : மீன்களின் உடல் செதில்களால் போர்த்தப்பட்டுள்ளது.
அ) கூற்று சரி, காரணம் தவறு
ஆ) காரணம் சரி, கூற்று தவறு
இ) கூற்றும் காரணமும் சரி
ஈ) கூற்றும் காரணமும் தவறு

122) **கருத்து:** அலுமினியம் தாமிரத்தை விட அதிகமாக வெப்பத்தைக் கடத்தும்.
**காரணம்:** அலுமினியத்தின் தன்வெப்ப ஏற்புத்திறன் தாமிரத்தை விட அதிகம்.
அ. கருத்தும் காரணமும் சரி. கருத்துக்கான காரணம் சரியானது.
ஆ. கருத்தும் காரணமும் சரி. ஆனால் கருத்துக்கான காரணம் தவறு.
இ. கருத்து சரி. காரணம் தவறு.
ஈ. கருத்து தவறு. காரணம் சரி.

123) **கருத்து :** வெயில் காலங்களில் தண்டவாளங்கள் விரிவடைகின்றன.
**காரணம் :** அதிக வெப்ப ஆற்றலினால் விரிவடைகின்றன.
அ) கருத்தும் காரணமும் சரி. கருத்துக்கான காரணம் சரியானது.
ஆ) கருத்தும் காரணமும் சரி. ஆனால் கருத்துக்கான காரணம் தவறு.
இ) கருத்து சரி. காரணம் தவறு.
ஈ) கருத்து தவறு. காரணம் சரி.

124) **கருத்து :** பனிக்கட்டியை எடுத்து குவளையில் உள்ள நீரில் போட்டால் மறைந்து விடுகிறது.
**காரணம் :** வெப்ப ஆற்றல் வளிமண்டலத்திலிருந்து பனிக்கட்டிக்குள் வந்ததினால் பனிக்கட்டி மறைந்து விடுகிறது.